முருகப்பெருமான் துணை

**மகான் எறிபத்த நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.05.2024**, சனிக்கிழமை

1. ஞானவான்கள் படைகள் தன்னை
ஞாலமதில் மிகுதி உருவாக்கிட
ஞானமருளி அவதாரம் எடுத்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென குரோதி தகர் திங்கள்
வல்லமைபட மூவேழு திகதி காரி வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 21 ம் நாள், 04.05.2024, சனிக்கிழமை)
3. வாரமதில் எறிபத்த நாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலமுற
சோரமில்லா ஞானவான்கள் தனை
சுத்தநெறிபட உருவாக்கி வரும்
4. வருகின்ற அரங்கன் வழிமுறை
வணங்கிடும் வள்ளல் நெறிமுறை
தருகின்ற தரணி காக்கின்ற
தனிப் பெரும் தயவு நெறிமுறை
5. முறையாக மக்களும் ஏற்று
மொழிகுவேன் அன்னதான சேவை
குறைவின்றி உலகினில் செய்து
குருமார்க்கம் விட்டு அகலா
6. அகலா தொண்டர்களாகி
அரங்கமகான் மேல் நம்பகம்
மிகையாக வைத்துத் தொடர
முழுமை தரும் வழிபாடாகி
7. ஆகியே வேலவன் பூசை
அனுதினமும் ஞானிகள் பூசை
மகிழவே மனம் அமைதிபட
மார்க்கமுடன் செய்து வருக

8. வருகவே வளமானச் சூழல்
வறுமையான வினை வென்று
தருமபலம் மிக்க மக்களாய்
தரணியில் பெருகிட மாற்றம்

9. மாற்றம் சமூக வழியாகியே
மண்ணுலகம் தரும பலமுடன்
ஆற்றல்பட ஞானவான்களாகிட
அதிகாரம் ஆளுமை என அனைத்தும்

10. அனைத்தும் மாற்றிடும் வண்ணம்
அற்புதம் தனை அரங்கன் படை
இணைத்துமே படைத்து நன்கு
எங்கும் அரங்கர் மயமாகி

11. ஆகியே உலகமாற்றம் தன்னை
ஆறுமுகனார் வெளிப்பட நடத்தி
அகிலமதும் ஞான ஆட்சிபெறும்
அருளிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—